


**11. 04. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்னும் 12 நாட்கள் எஞ்சியுள்ள நிலையில் அரசியல் கட்சித் தலைவர்கள் விறுவிறுப்பான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

2. தமிழக உள்துறை செயலாளராக திரு. கே. மணிவாசனை நியமித்து தேர்தல் ஆணையம் இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

3. ஈரானிலிருந்து 345 இந்திய மீனவர்கள் அர்மேனியா வழியாக தாயகத்திற்கு அனுப்பப் பட்டுள்ளதாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

4. தமிழக கிழக்கு கடற்கரை பகுதியில் மீன்பிடி தடைக்காலம் வரும் 15-ம் தேதி தொடங்குவதால் ஆழ்கடல் மீனவர்கள் உடனடியாக கரைக்கு திரும்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

5. IPL 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னையில் இன்று இரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் - டெல்லி கேப்பிட்டல்ஸை எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

தேர்தல் – பிரச்சாரம்

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்னும் 12 நாட்கள் எஞ்சியுள்ள நிலையில் அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து புதுக்கோட்டை, மாவட்டம் விராலிமலையில் தி. மு. க. தலைவர் திரு. மு. க. ஸ்டாலின் இன்று காலை நடைப்பயணம் மேற்கொண்டு வாக்குகளை சேகரித்தார்.

புதுக்கோட்டை, திருப்பத்தூரில் பொதுக்கூட்டத்தில் இன்று உரையாற்றுகிறார்.

அ.இ.அ.தி.மு.க. பொதுச்செயலர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி, தஞ்சை திருவாரூர் மாவட்டங்களில் அஇஅதிமுக மற்றும் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரிக்கிறார்.

கோவை தெற்கு தொகுதியில் போட்டியிடும் அஇஅதிமுக வேட்பாளருக்கு ஆதரவாக இன்று பிரச்சாரம் மேற்கொண்ட பி.ஜே.பி.யின் முன்னாள் தலைவர் திரு. அண்ணாமலை தி.மு.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருப்பதாக குற்றம் சாட்டினார்.

ஈரோடு, சத்தியமங்கலம் நகர்ப்பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்ட த.வெ.க.வின் திரு. செங்கோட்டையின், பவானி ஆற்றில் சாயக்கழிவு கலப்பதால் பொதுமக்களுக்கு ஏற்படும் சுகாதார சீர்கேட்டிற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குற்றம் சாட்டினார்.

கடலூர் மாவட்டத்தில் உள்ள 9 சட்டமன்ற தொகுதிகளிலும் தேசிய ஜனநாயக கூட்டணி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி, நாம் தமிழர் கட்சியினர், தமிழக வெற்றிக்கழகத்தினர், தமிழக வாழ்வுரிமை கட்சியினர் தத்தம் தொகுதிகளில் தீவிர பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே விருத்தாச்சலத்தில் இன்று பிரச்சாரத்தை ரத்து செய்துள்ள த.வெ.க. தலைவர் திரு. ஜோசப் விஜய், வேட்பாளர்கள் களத்தில் இறங்கி, வாக்காளர்களை நேரில் சந்தித்து வாக்கு கோர அறிவுறுத்தியுள்ளார்.

நெல்லையில் பிரச்சாரம் மேற்கொண்ட நாம்தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் தமது கட்சிக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டால் தென் மாவட்ட விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கான நவீன திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றார்.

தென்காசி கடையநல்லூரில் கட்சி வேட்பாளர்களுக்கு இன்று ஆதரவு திரட்டுகிறார்.

இதனிடையே பி.ஜே.பி. மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திரமோடி நாளை மறுநாள் பி.ஜே.பி-யின் தமிழ்நாடு வாக்குச்சாவடி முகவர்களுடன் நமோ செயலி வாயிலாக உரையாடுகிறார்.

❖❖❖❖❖❖❖❖

மணிவாசன்

தமிழ்நாட்டின் உள்துறை செயலாளராக திரு. கே. மணிவாசனை நியமித்து தேர்தல் ஆணையம் இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுவரை திரு. தீரஜ்குமார் உள்துறை செயலராக பதவி வகித்து வந்தார்.

தமிழக தலைமைச் செயலாளர், தமிழக காவல்துறை தலைவரை தொடர்ந்து உள்துறை செயலாளரும் மாற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இன்றுமாலைக்குள் திரு. மணிவாசன் பதவியேற்கவும் ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

தேர்தல் மாவட்டங்கள்

தமிழகத்தில் தேர்தல் நெறிமுறைகள் முழுமையாக பின்பற்றுவதை அதிகாரிகள் உறுதி செய்யுமாறு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் தேர்தல் பணிகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கான 2-ம் கட்ட பயிற்சிக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. ரத்தினசாமி தலைமையில் இன்று நடைபெற்றது.

வாக்குச்சாவடி தலைமை அலுவலர், வாக்குப்பதிவு அலுவலர்கள், தேர்தல் நுண்பார்வையாளர்கள் இதில் பங்கேற்றனர்.

சிவகங்கை மாவட்டத்தில் பதற்றமான வாக்குச் சாவடிகளில் தேர்தல் நாளன்று பணியாற்றும் அலுவலர்கள் விகிதாச்சார முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி. பொற்கொடி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள 4 சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்காளர்கள் சிரமமின்றி வாக்களிக்க ஏதுவாக வாக்குச்சாவடி மையம் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய வாக்காளர் தகவல் சீட்டு வினியோகிக்கும் பணி இன்று தொடங்கின.

❖❖❖❖❖❖❖❖

நாகை வாய்ஸ்

நாகை மாவட்டத்தில் தபால் வாக்கிற்கு விண்ணப்பித்த மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளி வாக்காளர்களின் வீடுகளில் சென்று வாக்கு சேகரிக்கும் பணிகள் நாளை முதல் மூன்று நாட்களுக்கு நடைபெறும் என மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் விண்ணப்பித்துள்ள வாக்காளர்கள் வீடுகளிலேயே இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

பறிமுதல்

விழுப்புரம் மாவட்டத்தில் தேர்தலுக்காக வாக்காளர்களுக்கு பணம் பரிசுப்பொருட்கள் வழங்கப் படுவதை தடுக்க 126 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா சுங்கச்சாவடி அருகே தேர்தல் நிலை கண்காணிப்புக் குழுவினர் மேற்கொண்ட வாகன சோதனையில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட 10 லட்சம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖

ஈரான் - மீனவர்கள்

ஈரானிலிருந்து 345 இந்திய மீனவர்கள் அர்மேனியா வாயிலாக இந்தியாவிற்கு அனுப்பப் பட்டுள்ளதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தள்ளார்.

இதற்காக அர்மேனிய அரசு மற்றும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் அரராரத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

அமெரிக்கா - ஈரான் பேச்சுவார்த்தை

மேற்காசிய பதற்றத்தை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக அமெரிக்காவும், ஈரானும் இஸ்லாமாபாத்தில் இன்று நேரடி பேச்சுவார்த்தைகள் மேற்கொள்கின்றன.

அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் மற்றும் ஈரான் நாடாளுமன்ற தலைவர் முகமது பஹேர் தலைமையிலான இருதரப்பு உயரதிகாரிகள் இதில் பங்கேற்கின்றனர்.

இதற்காக பாகிஸ்தான் புறப்பட்டுள்ள திரு. வான்ஸ் இந்த பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமையும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஈரான் நாடாளுமன்ற தலைவர் திரு. கலிஃபாப் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் பரஸ்பரம் எட்டப்பட்ட முடிவுகளை அமெரிக்கா இதுவரை நிறைவேற்றவில்லை என்று குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் இந்த இரண்டு முடிவுகளும் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

விக்ரம் மிஸ்ரி

இந்தியா - அமெரிக்கா இடையிலான எரிசக்தி ஒத்துழைப்பு குறித்து திரு. விக்ரம் மிஸ்ரி உடன் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தை நடைபெற்றதாக இந்தியாவிற்கான அமெரிக்க தூதர் Sergio Gor கூறியுள்ளார்.

சிவில் அணுசக்தி, நிலக்கரி வாயுமயம் மற்றும் எரிபொருள் சார்ந்த ஏற்றுமதி தொடர்பாக இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற அமெரிக்கா தயாராக இருப்பதாக அவர் எடுத்துரைத்தார்.

இந்தியாவின் எரிசக்தி கொள்கையில் நீடித்த அணுசக்தி தொழில்நுட்ப கட்டமைப்பு மசோதா நிறைவேற்றப்பட்டது முக்கிய மைல் கல் என்றார்.

இந்த மசோதா இந்தியாவின் அணுசக்தி கட்டமைப்பை நவீனமயமாக்கி, பாதுகாப்பு தரத்தை உயர்த்தி, சர்வதேச வாய்ப்புகளுக்கு திறவுகோலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖

மீன்பிடி தடைக்காலம்

கன்னியாகுமரி முதல் திருவள்ளூர் வரையிலான தமிழக கிழக்கு கடற்பகுதியில் மீன்பிடி தடைக்காலம் வரும் 15-ம் தேதி தொடங்குகிறது.

இதையடுத்து ஆழ்கடலுக்கு சென்ற மீனவர்கள் வரும் 14-ம் தேதிக்குள் கரை திரும்புமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

மீன்களின் இனப்பெருக்க காலத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் ஏப்ரல் 15ம் தேதிமுதல் ஜூன் 15 ம் தேதிவரை 61 நாட்களுக்கு விசை மற்றும் இழுவலை படகுகளுக்கு தடைவிதிக்கப்படுவது குறிப்பித்தக்கது.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் நியூ சண்டிகரில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு பஞ்சாப் கிங்ஸ் – சன் ரைசர்ஸ் ஹைதராபாத்தையும்,

சென்னையில் இரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் - டெல்லி கேப்பிட்டல்ஸையும் எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

பேட்மிண்டன்

சீனாவில் நடைபெறும் ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் பட்ட போட்டியின் ஆடவர் ஒற்றையர் இறுதி ஆட்டத்திற்கு இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி முன்னேறியுள்ளார்.

இன்று காலை நடைபெற்ற அரையிறுதியில் ஆயுஷ் ஷெட்டி - தாய்லாந்தின் குன்லாவத்தை 10-21, 21-19, 21-17 என்ற செட்களில் வென்றார்.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை நிறைவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖